# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 13, 2019 Weekly E-paper • JULY 13, 2019





# நசுக்கப்படும் ஜனநாயகத்தின் குரல்வளை

பொள்ளாச்சி மா.உமாபதி



**நியாயம் கிடைக்கவில்லை**

மா.உதயகுமார்

**இந்தித் திணிப்பு**

தலையங்கம்



**தென்னகத்துச் சூரியன்**

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூலை 13, 2019

Weekly E-paper • JULY 13, 2019


# நசுக்கப்படும் ஜனநாயகத்தின் குரல்வளை

● பொள்ளாச்சி மா.உமாபதி

ஜெர்மானிய நாடு இரண்டாம் முறையாக ஹிட்லரைத் தேர்ந்தெடுத்த பின்னர்தான் அதுவரை அறியப்படாத சர்வாதிகாரி ஹிட்லர் உலகத்துக்கு வெளிப்பட்டார். அதுபோல் இந்தியாவிலும் இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நரேந்திர மோடி இரண்டாம் ஹிட்லராக உருவெடுத்து வருகிறார். இந்திய ஜனநாயகம் மிகப் பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளது. ஏற்கனவே மக்களவையில் பெரும்பான்மையைப் பெற்று விட்ட மோடி, மாநிலங்கள வையிலும் பெரும்பான் மையைப் பெற எல்லாவகையான தகிடுதத்தங்களையும் மேற் கொண்டு வருகிறார்.




மாநிலங்களவையில் மொத்தம் உள்ள 245 இடங்களில் 123 இடங்களைப் பெற்றால் அது பெரும்பான்மையைக் கொடுத்துவிடும். இப்போது 102 இடங்களைக் கொண்டுள்ள பாஜக, ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சியில் இருந்து 4 மாநிலங்களவை உறுப்பினர்களைக் குதிரை பேரத்தில் தங்கள் வசம் இழுத்து விட்டனர். இதுவன்றி ஜூலை 18 ஆம் நாளில் நடைபெறவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் அவர்களின் எண்ணிக்கை 9 அல்லது 10-ஆக உயரக் கூடும். மேலும் கர்நாடகச் சட்டமன்றத்தில் கணிசமான காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை விலைபேசி இழுத்து வருகின்றனர். கோவா மாநிலத்திலும் சற்றொப்ப 10 சட்டமன்ற உறுப்பினர்களை இழுத்துள்ளனர். ஆக நாடுமுழுவதும் ஆட்சி, அதிகாரம், பணம், பட்டம், பதவிகளைக் காட்டி, எதிர்க்கட்சி உறுப்பினர்களை இழுத்து வருகின்றனர். இதனால் ஜனநாயகம் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளது.

பாசிச பாஜக, மக்களவை , மாநிலங்களவை இரண்டிலும் பெரும்பான்மை பெறுவது இந்திய ஜனநாயகத்துக்கு பேராபத்தாகும்.

ஏற்கனவே முன்னேறிய பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு சட்ட முன்வடிவை எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நேரடியாக நாடாளுமன்றத்தில் கொண்டுவந்து 5 நாள்களில் அதைச் சட்டமாக்கி விட்டனர். சமூகநீதிக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அபாயம் அது. இதர தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் தங்கள் இட ஒதுக்கீட்டு உரிமைகளுக்காகப் பல்லாண்டு காலம் தொடர்ந்து கிளர்ச்சி செய்து, நீதிமன்றத்தின் நெடிய கதவுகளைத் தட்டி, கடுமையான சிரமங்களுக்குப் பிறகு போராடிப் பெற்ற உரிமைகளை முன்னேறிய வகுப்பார் எந்தவிதக் கோரிக்கையும் இன்றி, எந்தவிதப் போராட்டமும் இன்றி, மிக எளிதாக நான்கைந்து நாள்களில் சட்டமாகப் பெற்றுவிட்டனர். அந்தச் சட்டப்படி, முன்னேறிய வகுப்பாரில் ஏழைகள் என்போர் ஆண்டுவருமானம் 8 இலட்சம் சம்பாதிப்பவர்கள்.

அது மட்டுமல்ல. ஒரே தேசம், ஒரே தேர்தல், ஒரே உணவுப் பங்கீடு அட்டை, ஒரே மதம், ஒரே மொழி என்பதன் வழியில் ஒரே நதிநீர் தீர்ப்பாயம் அமைக்கவும் உள்ளனர். நாம் காவிரி நீரில் உள்ள உரிமைகளைப்பெற 1972 முதல் போராடி, 1991-இல் சமூகநீதிக் காவலர் விபி சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது காவிரி நதிநீர் நடுவர் மன்றம் அமைத்துக் கொடுத்தார். அந்த நடுவர்மன்றம் தனது இறுதித் தீர்ப்பினை 2007இல் வழங்கியது. அதில் தமிழ்நாட்டுக்கு 192 டிஎம்சி தண்ணீர் வழங்க உத்தரவிட்டது. அதன் பின் பல்வேறு தடைகளுக்குப்பின் அது 2013 ஆம் ஆண்டில்தான் மத்திய அரசிதழில் (கெஜட்) வெளியானது. அப்போதே காவிரி மேலாண்மை வாரிய மும், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவும் அமைக்கவேண்டிய மத்திய அரசு இழுத்தடித்தது. அதற்காக உச்சநீதிமன்றத்தை நாடி, அது 2018 பிப்ரவரி 16 அன்று 174.25 டிஎம்சி தண்ணீர் வழங்க ஆணை இட்டுள்ளது.

27 ஆண்டுகள் உச்சநீதிமன்றத்திலும், 7 ஆண்டுகள் நடுவர்மன்றத்திலும் 528 அமர்வுகளை எதிர்கொண்டு பெற்ற தீர்ப்பை, மீண்டும் ஒரே நதிநீர்த் தீர்ப்பாயம் அமைத்தால் பழைய தீர்ப்புகளையெல்லாம் ரத்து செய்து புதிய வழக்காக எடுத்துக்கொண்டு அங்கே கொண்டுபோய் இன்னுமொரு 10, 20 ஆண்டுகள் இழுத்தடிதது விடுவார்கள். இப்படிப்பட்ட பேரபாயங்கள் நம்மை எதிர்நோக்கி உள்ளன.

பாஜக ஆட்சியில் தமிழர் நலம் முற்றிலுமாகக் கேள்விக்குறியாகி விடும். எதிர்க்கட்சிகள் நசுக்கப்படும். ஜனநாயகத்தின் குரல்வளை நசுக்கப்படும். மிகப்பெரிய உரிமைப் போருக்கு நாம் அணியமாக வேண்டி இருக்கும். நாடு ஒரு பேராபத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எச்சரிக்கை! எச்சரிக்கை!! •

# முகிலன் கிடைத்துவிட்டார் நியாயம்தான் கிடைக்கவில்லை

● மா.உதயகுமார்



தமிழ் சினிமாவில் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒரு வகையான திரைப்படங்கள் பெரிய அளவில் வெளியாகும்.. நகைச் சுவைப் படங்கள், "பேய்ப்" படங்கள் என்கிற வரிசையில் தற்போது த்ரில்லர் படங்களின் காலமாக இது இருக்கிறது. தமிழ் சினிமா மட்டுமல்ல, தமிழ் நாட்டில் நடைபெறும் ஆட்சியும் த்ரில்லர் ஆட்சியாகவே இருக்கிறது. இத்திரைப்படங்களின் இயக்குநர்கள் காட்சியமைப்புகளை யாரும் எளிதில் கணித்துவிட முடியாதபடி திறம்பட அமைத்திருப்பர். ஆனால் தமிழ்நாட்டு அரசியலை நேரடியாகவும் மறைமுகமாகவும் இயக்குபவர்கள் இந்த த்ரில்லர் பட இயக்குநர்களுக்கே சவால் விடும் அளவிற்கு திறமைசாலிகளாக இருக்கிறார்கள்.

141 நாட்களுக்குப் பிறகு சென்ற வாரம், தன்னை வெளிப்படுத்திக் கொண்டார் மனித உரிமைச் செயற்பாட்டாளர் முகிலன். தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கிச் சூடும் அதன் பின்னணியுமே புரியாத புதிராக இருக்கும் போது, தற்போது முகிலன் காணாமல் போய், மீண்டும் வந்தது புதிருக்குள் புதிராக இருக்கிறது. இதன் பின்னணியில் யார் இருப்பார்கள் என்பதை அனைவரும் எளிதில் கணித்துவிட முடியும். ஆனால் அதைச் சட்டத்தின் முன் நிரூபணம் செய்வது தான் இயலாத காரியமாக இருக்கிறது.

ஸ்டெர்லைட் போராட்டத்தின் போது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூடு, திட்டமிட்ட படுகொலை என்பதற்கான ஆதாரங்களை வெளியிட்ட அன்று இரவு காணாமல் போனார் முகிலன். எல்லா முற்போக்கு அமைப்புகளும் தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. இந்த நிலையில் 141 நாட்களுக்குப் பிறகு திருப்பதி இரயில் நிலையத்தில் முகிலன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு முழக்கங்கள் இட்டார். திருப்பதி சென்று வந்தால் திருப்பம் உண்டாகும் என்று சொல்வார்கள். ஆனால் திருப்பங்கள் எல்லாம், அவர்கள் ஏற்படுத்துவதுதான் என்பது முகிலன் விவகாரத்தின் மூலம் விளங்குகிறது. பாலியல் புகாரில் முகிலன் கைது செய்யப்பட்டார்.



தொடர்ந்து தங்களுக்கு வேண்டாதவர்கள் மீது மட்டும் பாலியல் புகார்கள் போடப் படுவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. மடங்களில் நடக்கும் பாலியல் குற்றங்கள் எதுவும் வெளிவருவதில்லை. வந்தாலும் அவை மூடி மறைக்கப்படுகின்றன. பொள்ளாச்சி, திருப்பூர், நிர்மலா தேவி விவகாரம் என எந்த ஒன்றிலும் முக்கியக் குற்றவாளிகள் யாரும் அடையாளப்படுத்தப்படவில்லை. ஆனால் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், மத எதிர்ப்பாளர்கள் போன்றோர் மீது மட்டும் பாலியல் வழக்குகள் போடப்படுவது, பெண்கள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகிறார்களா என்ற கேள்வியை எழுப்புகிறது. எதுவாக இருந்தாலும் விசாரணை செய்து மெய்ப்பிக்கப்பட்டு உரிய தண்டனை வழங்குவதில் மாற்றுக் கருத்து ஒன்றுமில்லை. ஆனால் சமூகத்திற்காகப் போராடுபவர்களை நசுக்குவதற்காகவும், மிரட்டுவதற்காகவும் இது செய்யப்படுமானால் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

முகிலன் காணாமல் போய் வந்து கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் நாம் எழுப்பும் வினாக்களுக்கு மட்டும் இன்னும் அரசிடம் இருந்து விடை வரவில்லை. முகிலன் நல்ல மனிதர்! அதனால் அவராகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். ஆனால் விடைகளும் தானாக வந்துவிடாது என்பதை அரசுக்குச் சொல்லிக்கொள்வோம்.

இப்போது கதையில் அடுத்த திருப்பம் மாட்டுக்கறி! பொதுவாக தயாரிப்பாளர் நஷ்டமடைந்துவிடக் கூடாது என்பதற்காகத் திரைக் கதைகள் உருவாக்கப்படும். ஆனால் இங்கு மட்டும்தான் நஷ்டமடைந்த ஒரு தயாரிப்பாளருக்காகத் திரைக்கதை உருவாக்கப்பட்டிருக்கிறது. ●


## கருஞ்சட்டைப் பதிப்பகம்

**இணையத்தள விற்பனை (online sales)**

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## ‘பீமாகோரேகான்’ நூல் வெளியீடு



07-07-2019 அன்று ‘பீமாகோரேகான்’ என்ற நூலின் வெளியீட்டு விழாவைத் ‘திராவிடத் தமிழர் கட்சி’ கோவையில் நடத்தியது. விழாவிற்கு கட்சித் தலைவர் வெண்மணி தலைமையேற்றார். தோழர் சுப.வீரபாண்டியன், தோழர் கு.ராமகிருஷ்ணன், தோழர் சுந்தரவள்ளி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஏற்புரையை நூலாசிரியர் மு.இனியவன் நல்கினார்.

## திண்டுக்கல் கலந்துரையாடல்



07-07-2019 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற பேரவை கலந்துரையாடல் கூட்டத்தில், ஜூலை மாத நிகழ்வாக 21.7.19 அன்று "நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும்" என்ற நூலின் அறிமுகக் கருத்தரங்கம் நடத்துவது எனவும், 2020 பிப்ரவரி 14 அன்று ‘காதலர் நாள் மாநாடு’ நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## திருச்சி முப்பெரும் விழா



10-07-2019 அன்று திருச்சி ஜமால் முகமது கல்லூரி முப்பெரும் விழாவில் தோழர் சுப.வீரபண்டியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இந்தியைத் திணிக்கும் மத்திய-மாநில அரசுகள்

‘ஒரே நாடு’ என்ற காவி வண்ணத்தை அடிக்கத் தொடங்கி விட்டது ஆர்.எஸ்.எஸ். பின்னணியில் இருக்கும் மத்திய பாஜக அரசு.

வலிமை மிக்க தந்தை பெரியாரின் தமிழக மண்ணில் கால் ஊன்ற முடியாமல் புறக்கடை வழியாக நுழைந்து கொண்டிருக்கிறது காவி.

2015-ஆம் ஆண்டு நடந்த தபால் துறைகளுக்கான தேர்வில் பீகார், அரியானா உள்ளிட்ட வடமாநிலத்தைச் சேர்ந்த, தமிழ் தெரியாத மாணவர்கள் ‘தமிழில்’ அதிகமான மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றார்கள். இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இப்பொழுது கிராமிய அஞ்சல் பணியிடங்களுக்கான தபால் துறைத் தேர்வுகளில் இந்தி மற்றும் ஆங்கிலம் என இரண்டு மொழிகளிலேயே வினாத்தாளில் கேள்விகள் கேட்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சுற்றறிக்கையின் மூலம் தமிழகம், கேரளா, கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழியில் தேர்வு எழுத முடியாமல், இந்தி மற்றும் ஆங்கிலத்திலேயே எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசின் இந்தச் சூது நிறைந்த திட்டங்கள் வடமாநில மாணவர்களை, தொழிலாளர்களை தமிழகத்தில் இறக்குமதி செய்ய வழிவகுக்கிறது.

அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில் 80 விழுக்காடு கொடுக்கப்பட வேண்டும். ஆனால், இன்றைய பாஜக அரசு 80 விழுக்காடும் வடமாநிலத்தவர்களுக்கே கொடுக்க வழிவகை செய்து கொண்டிருக்கிறது.

தற்போது இன்னொரு பிரச்சினையும் தமிழகத்தில் உருவெடுத்துள்ளது.

சென்னை மாநகரில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் ரசீதில் தமிழ் நீக்கப்பட்டு இந்தி, ஆங்கிலம் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

நெடுஞ்சாலைத் துறையில் உள்ள ‘மைல்’ கற்களில் தமிழ் நீக்கப்பட்டு இந்தி மட்டுமே பெரும்பாலான இடங்களில் இடம் பெற்றுள்ளது.

தமிழகப் பாடத்திட்டத்தில் இந்தியைப் பயிற்று மொழியாகக் கொண்டுவர வலியுறுத்திய மத்திய அரசு தமிழக எதிர்ப்பின் காரணமாகப் பின்வாங்கியிருக்கிறது, தற்காலிகமாக.

அண்மையில் தமிழ்நாடு அரசுப்போக்குவரத்துக் கழகம் வாங்கிய புதிய பேருந்துகளில், தமிழே இல்லாத இந்தியும், ஆங்கிலமும் இடம்பெற்ற ‘ஸ்டிக்கர்கள்’ ஒட்டப்பட்டிருந்தன.

மத்திய அரசின் இந்த ஒருதலைப்பாடான ஒரே இந்தியா திட்டத்திற்கு, தமிழக அரசும் வாய்மூடித் தாளம் போடுவதும், பாஜகவுக்குத் துணை நிற்பதும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

# காவி இருளகற்ற வந்த சூரியன் தலைவர் ஸ்டாலின்

● வெற்றிச்செல்வன்

"தி.மு.க வின் தலைவராகத் தளபதி ஸ்டாலின் அவர்களின் ஓய்வறியாத உழைப்பும், அரசியல் களத்தில் வெற்றிவாகை சூடிட, கூட்டணி வியூகமும், அதனை வகுத்ததோடு, நெறிப்படுத்தியும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகவே செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மக்கள் மத்தியில் அந்த உரிமைப் போர் முழக்கத்தைத் தணியாத முழக்கமாகவே ஆக்கி, தேர்தல் நேரத்தில் களப்பணியிலும், பிரச்சாரத்திலும் ஒப்பற்ற முறையில் செயலாற்றி, கூட்டணிக் கட்சிகளைத் தக்கபடி ஒருங்கிணைத்ததும் வெற்றிக்கான அடிப்படையாகும், பாராட்டுக்கள் !".

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் வெற்றி வாகை சூடிய தலைவர் ஸ்டாலினுக்கு இப்படியொரு நீண்ட பாராட்டு மடலை அளித்திருப்பது வேறு யாருமல்ல; திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் அவர்கள்தான் (விடுதலை, 24.05.2019.) "நாங்கள் செல்லும் பாதையைப் பெரியார் திடல்தான் தீர்மானிக்கிறது" என்று தலைவர் ஸ்டாலின் கூறியதை இங்கு நினைவுகூர்வது மிகவும் பொருத்தமானது.



தமிழகத்தில் வெற்றிடம் ஏற்பட்டுவிட்டது என்று ஓயாமல் கேட்ட வெற்றுக் கூச்சல்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், மிகச்சிறந்த முறையில் தோழமைக் கட்சிகளை ஒருங்கிணைத்து, மோடி தலைமையிலான பா. ஜ. க. அரசை மத்தியிலிருந்து அகற்ற வேண்டும் என்ற ஒற்றை இலக்கினை முன்வைத்து, ஆளுங்கட்சியின் அதிகார பலம், பணபலம் அனைத்தையும் தாண்டி, இந்தியாவிற்கே முன்மாதிரியான ஒரு மக்கள் தீர்ப்பை சாதித்துக் காட்டியிருக்கிறார் தலைவர் மு. க. ஸ்டாலின்.

அதே நேரம், மற்ற மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் வேறாக இருக்கின்றன. போலி தேசபக்தியையும், போதையாய் மதவெறியையும் ஊட்டி, மக்களின் வாக்குகளைப் பெற்றுள்ளது பாரதிய ஜனதா கட்சி. சாதியையும், மதத்தையும் கணக்குப் பார்த்து, பிரிவினைவாத அடிப்படையிலான பிரச்சாரத்தின் மூலம் வாக்கரசியல் செய்துள்ளது பா.ஜ.க. ஆனால் அந்தக் கணித உத்திகள் தமிழ்நாட்டில் பயன் தராது என்பதைத் தமிழக மக்கள் பா.ஜ.க. வுக்கு அழுத்தமாக உணர்த்தியிருக்கிறார்கள். தமிழகம் பெரியார் மண் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறது.

மாறாக, வளர்ச்சி என்னும் போலி முகமூடி சூடி ஐந்தாண்டுகள் மக்களை மாயையில் வைத்திருந்தது போதாதென்று, இன்னுமோர் ஐந்தாண்டுகள் நாட்டைச் சூறையாடக் காத்துக் கொண்டிருக்கிறது காவிக்கும்பல். இந்தியத் துணைக்கண்டமெங்கும் தனது ஆக்டோபஸ் கரங்களால் காவி, தனது சித்தாந்தத்தை விதைத்துக் கொண்டிருக்கிறது. விடுதலைக்குப் பின்னர் எழுபதாண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த மதச்சார்பின்மைக்குப் பேராபத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. Unity என்ற சொல்லுக்கு பா.ஜ.க. தந்துள்ள அர்த்தம் Uniformity என்பது. ஒற்றுமை என்ற பெயரில் நாடு முழுமைக்கும் ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்டு வந்து இந்தியாவின் பன்மைக் கலாச்சாரத்தை அழிக்கும் ஆர். எஸ்.எஸ். சித்தாந்தத்தை அமல்படுத்தும் பா.ஜ.க. வின் செயலை எப்பாடுபட்டாவது தடுக்க வேண்டும். அத்தகைய வலிமையை இந்தியாவிற்குத் தரும் ஒரே நம்பிக்கை, தி.மு.க. வின் தலைவர் மு.க. ஸ்டாலின் மட்டுமே.

இந்த சூழ்நிலையில், மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுப்பதிலும், மாநிலங்கள் மத்திய அரசின் கைப்பாவையாகப் பாவிக்கப்படுவதைத் தடுப்பதுமான பெரும்பணி மாநிலக் கட்சிகளின் முன்னால் இருக்கிறது. இதற்கான தீர்வு அறிஞர் அண்ணா முன்மொழிந்த மாநில சுயாட்சி முழக்கத்தை உயர்த்திப் பிடிப்பதே. இதற்கான முன்னெடுப்பாக மாநில உரிமைகள் குறித்து உண்மையான அக்கறை கொண்ட மாநிலக் கட்சிகளை ஒருங்கிணைத்து, வலுவான தலைமையின்கீழ் அவற்றை ஒன்றுசேர்ப்பதே இதற்கான ஒரே தீர்வாக அமைய முடியும்.

தமிழக மக்கள் மக்களவைக்குத் தேர்ந்தெடுத்திருக்கும் தி.மு.க. கூட்டணியின் 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில உரிமைகளை மீட்டெடுக்கத் தொடர்ந்து தில்லியில் குரல் கொடுக்க வேண்டும். நெருக்கடிநிலைக் காலகட்டத்தின்போது, மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்ட கல்வி உள்ளிட்ட அம்சங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பினையும், மாநிலங்களின் உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் இன்ன பிற அம்சங்களையும் நாடாளுமன்றத்தில் விவாதப் பொருளாக்க வேண்டும். இதற்கான ஒத்துழைப்பைப் பிற மாநில உறுப்பினர்களிடமிருந்தும் பெற வேண்டும். இத்தகைய முயற்சிகளைச் சரியான முறையில் ஒருங்கிணைவு செய்து முன்னெடுக்க மாநில சுயாட்சிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தாலும், அதன் தலைவரான மு. க. ஸ்டாலின் அவர்களாலுமே இயலும்.

இன்றைய தமிழ்ச் சமூகத்தில், தமிழ்த்தேசியம் என்ற பெயரில் உலவும் போலித் தமிழ்த்தேசியவாதிகள், திராவிட இயக்க ஒவ்வாமையையும், எதிர்ப்புணர்ச்சியையும் இளைய தலைமுறையினரிடம் தொடர்ந்து விதைத்து வருகின்றனர். அவதூறுகளை மட்டுமே முதலீடாகக் கொண்டு தவறான வழிகாட்டுதலின் மூலம், திராவிட இயக்க எதிர்ப்புணர்வை வலுவாக்கி, காவிக்குத் துணை செய்வதே இவர்களின் பெருநோக்கமாக இருக்கிறது.

இப்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில், பிரிவினைவாத சக்திகளை மக்களுக்கு அடையாளம் காட்டுவதும், நாடு முழுவதும் அண்ணல் அம்பேத்கரின், தந்தை பெரியாரின் சித்தாந்தங்களைக் கொண்டு செல்வதுமே இந்தியாவைத் துண்டாடக் காத்திருக்கும் மதவாத பா.ஜ.க.விடமிருந்து நாட்டைக் காப்பாற்றும். அப்பணியை மேற்கொள்வது, நாட்டிலுள்ள முற்போக்கு அமைப்புகளின் முதன்மையான கடமையாகும். நாடு முழுவதும் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குச் சக்திகளை ஒருங்கிணைப்பதும், அவற்றை ஓரணியாகத் திரட்டி, பா.ஜ.க.வை அதிகாரத்திலிருந்து அகற்றுவதும் தலைவர் மு. க. ஸ்டாலின் முன்பு காத்திருக்கும் பெரும்பணிகளாகும். அப்பணியை அவர் சிரமேற்கொண்டு செவ்வனே செய்து முடிப்பார் என்பதில் தமிழகம் மட்டுமன்று, இந்தியாவும் நம்பிக்கை கொண்டுள்ளது.

**("திராவிடச் சிறகுகள்" அமைப்பு நடத்திய கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற கட்டுரை)**

●

**Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,**